[1973 பிப்ரவரி 12

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) அரசு பொது மருத்துவ மனையில், அளவுக்கு மீறி பெருகவில்லையென்றாலும் கரப்பான் பூச்சி யினால் சிறு தொல்லை இருந்துதான் வருகிறது.

(இ) உடல்நல ஆய்வாளரின் கண்காணிப்பில், மருத்துவ மனையின் எல்லாப் பகுதிகளிலும் நோயாளிகள் படுக்கும் கட்டில்கள் மற்றும் அவர்களின் படுக்கைகளுக்குப் பக்கத்தில் வைக்கப்பட்டிருக்கும் உணவு வைக்கப்படும் அறை மூடிகளிலும் கூட முறையாகப் பூச்சிக்கொல்லி மருந்துகள் தெளிக்கப்படுவதோடு, இத்தொல்லையை ஒழிக்க எல்லா முயற்சியும் எடுக்கப்படுகிறது.

திரு. கே. ஏ. வகாப் : அமைச்சர் அவர்கள் கரப்பான் பூச்சிகள் அதிகமாக இல்லையென்று சொன்னார்கள். ஆனால் அங்கு சென்று பார்த்தால் அங்குள்ள பைப்புகளில் இவை புற்று வைத்து உற்பத்தி யாவதாகத் தெரிகிறது. நீர் போகின்ற குழாய்கள், சாக்கடை பைப்புகள் ஆகியவற்றை சரியாகச் சுத்தம் செய்தால் இவற்றை ஒழிக்க முடியும். எப்படியாவது இந்தக் கரப்பான் பூச்சிகளை ஒழிக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : என்னுடைய வீட்டிலேயே உள்ள சுத்தம் செய்த குழாய்களிலிருந்து இத்தகைய பாச்சைகள், காக்ரோச்சஸ் வந்து கொண்டுதான் இருக்கின்றன. குழாய்களைச் சுத்தம் செய்வதால் மட்டும் இதை அழித்துவிட முடிவதில்லை. இவற்றை அடியோடு ஒழிக்க மருந்து வகைகள் இல்லை. ஓரளவுக்குத் தான் கட்டுப்படுத்த முடிகிறது.

திரு. எஸ். வடிவேல் : ஆஸ்பத்திரிகளில் கரப்பான் பூச்சி தொல்லையை விட மூட்டைப் பூச்சி தொல்லை ரொம்ப அதிகமாக இருக்கிறது. மூட்டைப் பூச்சியை ஒழிக்க முதலில் நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இவற்றை ஒழிப்பதற்காக இன்றைக்கு இருக்கிற நவீன முறைப்படி என்னென்ன மருந்துகள் பயன்படுத்தப்பட வேண்டுமோ அவை பயன்படுத்தப்படுகிறது. இந்தப் பூச்சிகளை ஒழிக்க இன்னொரு பூச்சிதான் உண்டாக வேண்டும். அது எந்தப் பூச்சி என்று இன்னும் தெரியவில்லை.

1973 பிப்ரவரி 12]

திரு. ஆ. பரந்தாமன் : ஜெனரல் ஆஸ்பத்திரியில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படுகின்ற வார்டுகளிலும் கரப்பான் பூச்சி தொல்லை இருக்கின்றது. ஆகவே, இதை ஒழிக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சட்ட மன்ற விடுதிகளில் அங்கத்தினர் ஒய்வாக இருக்கும்போது அதை அடியோடு ஒழிக்க முயற்சிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் கேட்பது சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படுகிற ஸ்பெஷல் வார்டுகளில் அந்தப் பூச்சிகளை ஒழிப்பது பற்றி.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மனிதர்களிலே நாம் ஒரு பங்கு. நாம் இருக்கும் இடத்தை மட்டும் சுத்தமாக வைத்துக் கொண்டால் அது சமூக அநீதியாக மாறிவிடும். எல்லோருக்கும் இருக்கும் கஷ்டம் நமக்கும் தெரிய வேண்டும்.

கால்நடை ஈட்டுறுதித் திட்டம்

126 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடைகளுக்கு இன்சூரன்ஸ் வசதி செய்து கொடுக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) இது குறித்து தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்கு ஆலோசனை ஏதேனும் தெரிவித்துள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை. ஆயினும் கால்நடை ஈட்டுறுதித் திட்டம் என்பது மத்திய அரசின் வரம்பிற்குட்பட்ட ஒன்றாகும். எனவே, இத்திட்டத்தை செயல்படுத்த வேண்டுமாயின் நாடாளு மன்றத்தின் ஒப்புதல் பெற வேண்டும்.

(இ) எழவில்லை. எனினும், இந்திய விவசாய ஆராய்ச்சி மன்றத்தின் முழு பொருள் உதவியுடன் தமிழகத்தில் முதன் முதலாக செங்கற்பட்டு மாவட்டத்தில் ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் கால்நடை ஈட்டுறுதி முன்னோடி ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இது பற்றிய முழு விவரங்களும் இத்துறையின் மூலமாக விவசாயப் புள்ளியியல் ஆய்வுக் கழகம், புதுடில்லிக்கு நேரிடையாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதன் முடிவு இன்னும் அறிவிக்கப்படவில்லை.

[1973 பிப்ரவரி 12

Import of Russian Marino Sheep

* 127. *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister of Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that Russian Goats and Sheep have been imported to the State in 1972; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) 25 கிடாக்களையும், 100 பெட்டை செம்மறி ஆடுகளையும் கொண்ட 125 ரஷ்ய மெரினோ செம்மறியாடுகள் ரூ. 1,82,495.40 செலவில் 1972 செப்டம்பர் திங்களில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. வெள்ளாடுகள் ரஷ்யா விலிருந்து இறக்குமதி செய்யப்படவில்லை. இறக்குமதி செய்யப் பட்டுள்ள செம்மறியாடுகள், கலப்பினப் பெருக்கு ஆராய்ச்சிகள் செய்யும் பொருட்டு உதகை சாண்டிநல்லாவிலுள்ள ஆடு வளர்ப்பு ஆராய்ச்சி நிலையத்தில் உள்ளன.

திரு. என். டென்னிஸ் : எல்லா மாவட்டங்களுக்கும் பயன்படும் வகையில் அந்த ஆடுகள் பகிர்ந்தளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ரஷ்யா போன்ற நாடுகளிலே அங்குள்ள தட்ப வெட்ப நிலையில் வளர்ந்த ஆடுகள் உதகையில் கொண்டுபோய் வளர்க்கப்பட்டால்தான் நீண்ட நாள் இருந்து பயன் தரும். எல்லா மாவட்டங்களிலும் நேரடியாக அந்த ஆடுகளைக் கொண்டுபோய் வைக்க முடியாது. மெரினோ ஆடுகளையும் நம்முடைய இன ஆட்டையும் கலப்பு செய்து தரமுள்ள கலப்பு இனத்தைப் பரவலாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தரவேண்டு மென்று அரசாங்கம் கருதுகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த மெரினோ ஷீப் உதகையில் வைக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அங்கு இறக்குமதி செய்யப்பட்ட இந்த வகை ஆடுகளில் பெரும்பகுதி இறந்துவிட்டதாகச் சொல்லப்படுவது உண்மையா? விவரம் அறிவிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இதுவரை அப்படி இறந்து விட்டதாகச் செய்தி வரவில்லை. ஒருவேளை அங்கத்தினர் அவர்கள் இதுபற்றி முன்னரே அறிந்திருப்பார்களேயானால், தெரிவித்திருப்பார்

1973 பிப்ரவரி 12]

களேயானுல் அதைப் பற்றி விசாரித்திருக்கக்கூடும். இந்த ஆடுகளும் இதற்கு முன்னுல் கொண்டுவரப்பட்ட ஆடுகளும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்றுதான் அறிகிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH: These goats and sheep thrive very well in Hosur and Denkanikota taluks on account of cool climate there. May I know from the Hon. Minister whether a sheep farm will be started there to improve the stock?

THE HON. THIRU K. ANBAZHAGAN: Nowadays, it is not the intention of the Government to start a farm for every particular type of cattle. The cattle farm which is at present at Hosur is capable of also having sheep or goat in that farm.

திரு. ஜே. ஜேம்ஸ்: இப்போது இறக்குமதி செய்யப்பட்டிருக்கிற செம்மறியாடுகளின் விசேஷத் தன்மைகள் என்ன என்று கூறுவார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அவை குளிர்நாட்டில் வளர்ந்த இனம் என்ற காரணத்தினுல் அவை மிக அதிக அளவிற்கு ஏறத்தாழ 13 கிலோ கிராம் அளவிற்கு கம்பளி தரக்கூடியவை, ஒரு முறை கம்பளி எடுக்க வெட்டுகிறபோது. நம் நாட்டு செம்மறி ஆடுகள் ஒரு புதிய கலப்பினத்தைத் தோற்றுவிக்க அது உதவும் என்று எதிர் அளவிற்கு கம்பளி தருகிற இனம் உடல் வலிவிலும் அதிகக் கனம் உள்ளதாக வளர வாய்ப்பிருக்கிறது. எனவே, அதிக எடை உள்ள தாகவும் அதே நேரத்தில் அதிகப்படி கம்பளி உற்பத்தி செய்வதற்கும் ஒரு புதிய கல்ப்பினத்தைத் தோற்றுவிக்க அது உதவும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

திரு. கே. எ. வகாப்: இப்போது ஆட்டு இறைச்சியின் விலே விஷம் போல் ஏறிவருகிறது. இப்போது நெல் உற்பத்தியில் தீவிரத் திட்டத்தின்கீழ் ஐ.ஆர். 8 போன்றவை உற்பத்தி செய்யப்படுவதைப் போல் ஆடுகளே அதிகப்படி உற்பத்தி செய்ய ஒரு தீவிரத் திட்டம் செயல்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இப்போதே ஒவ்வொரு மாவட்டத்திலும் கூட்டுறவு ஆடு வளர்ப்புச் சங்கங்களே ஆங்காங் குள்ள விவசாயிகள் ஏற்படுத்த ஊக்கம் அளிக்கப்படுகிறது. சேலம் மாவட்டத்தில் ஒரு நல்ல இன ஆடு இருக்கிறது. அந்த இன ஆட்டை, மேய்ச்சேரி என்பதை, அதிகமாகப் பரப்பச் செய்வதற்கு